பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 25 செவ்வாய்க்கிழமை 09.03.2021 கதிர் 355

## கொரோனாவால் மேலும் ஐவர் பலி

கொரோனா வைரஸ் தொற்றிய நிலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் ஐவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நான்கு பெண்களும், ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 507 ஆக அதிகரித்துள்ளது.

# சர்வதேசத்தின் பாராமுகமே மோச நிலைக்குக் காரணம்!

### நேரடியாகக் குற்றம் சுமத்துகின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்



யாழ்ப்பாணம்,மார்ச் 09

தமது நிலங்கள் பறிபோகின்றன, புராதன சின்னங்கள் அழிக்கப்படுகின்றன, தமது வாழ்வாதாரம் சுரண்டப்படுகின்றது என்று தமிழ் மக்கள் கடந்த 12 வருடங்களாக ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும், உண்ணாவிரதங்களையும் நடத்தி வந்துள்ளார்கள். ஆனால், அவற்றை சர்வதேச சமூகம் கவனத்தில் கொண்டு காத்திரமான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்திருந்திருக்கவில்லை. இதனால் தான் இன்று நிலைமை இந்தளவுக்கு மோசம் அடைந்திருக்கின்றது.

- இப்படிக் குற்றம் சுமத்தியிருக்கின்றார் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

☞2

## குற்றவாளிகள் யார் என்ற உண்மையை தெரிவிக்கத் தவறியுள்ளது ஆணைக்குழு

### முன்னாள் பிரதமர் ரணில் குற்றச்சாட்டு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை விளக்கமற்றது என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அதேநேரம் பிரதான குற்றவாளிகள் யார் என்ற உண்மைகளை ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிக்கத் தவறியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை அறிக்கை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள தனது நிலைப்பாட்டிலேயே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

☞2

## சிறைச்சாலைக்குள் ரஞ்சனுடன் 'செல்பி'

### உருவானது புதிய சர்ச்சை



அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவைச் சந்திப்பதற்காக சக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண நேற்று சிறைச்சாலைக்குச் சென்றிருந்தார்.

☞2

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையின் அனைத்து பரிந்துரைகளையும் அமுல்படுத்த முடியாது

### கோட்டாபய அரசு அறிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையில் குறிப்பிட்டுள்ள அனைத்து விடயங்களையும் நாம் நடைமுறைப்படுத்தமாட்டோம். அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதன்படி 'பொதுபலசேனா' அமைப்பை நாம் தடைசெய்ய மாட்டோம்.

- இவ்வாறு கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி

☞2

### மேல் மாகாணப் பாடசாலைகள்

## தரம் 5, 11, 13 மார்ச் 15இல் ஏனையவை ஏப்ரல் 19இல்

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் எதிர்வரும் திங்கட்கிழமை, மார்ச் 15ஆம் திகதி திறக்கும் நடவடிக்கைக்கு அமைய, மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் தரம் 5, 11, 13 மாத்திரம் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது

☞2

## கிளிநொச்சியில் சடலமாக மீட்கப்பட்ட குடும்பப் பெண்



கிளிநொச்சி - அம்பாள் குளத்தில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் இன்று முற்பகல் மீட்கப்பட்டது

☞2

## போர் விதிமுறை குறித்து எமக்கு பாடம் கற்பிக்க வேண்டியதில்லை

### இராணுவத் தளபதி இறுமாப்பு

இலங்கை இராணுவத்துக்குஎதிராக முன்வைக்கும் போர்க்குற்றச்சாட்டுகளை நிராகரிக்கும் விதமாக அரசு முன்னெடுக்கும் செயற்பாடுகள் திருப்தியளிக்கின்றன. மனிதாபிமானமாக நாம் முன்னெடுத்த இறுதிப் போர் குறித்து எவரும் எமக்குக் கற்பித்துத்தர வேண்டிய அவசியம் இல்லை.

- இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

☞2

## 'மொட்டு'வின் தலைமையை கோட்டாபயவுக்கு வழங்கவும்

### அமைச்சர் வாசுதேவவும் வலியுறுத்து



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசியல் கூட்டணியின் தலைமைப் பதவி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட வேண்டும்.

☞2



## கிளிநொச்சியில் சடலமாக .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 37 வயதான பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிரதேச மக்கள் வழங்கிய தகவலையடுத்து இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்தனர்.

## போர் விதிமுறை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் நகர்வுகளைக் கையாள்வதில் அரசு செய்ய வேண்டிய மிகச் சரியான நடவடிக்கைகளைக் கையாண்டு வருகின்றனர்.

இராணுவத்தைப் பாதுகாக்கும் விதமாகஅல்லதுஇராணுவத்தின்உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் விதமாக அரசு கருத்துக்களை முன்வைத்து வருகின்றது. இது எமக்கும் மகிழ்ச்சியடையக் கூடிய ஒரு காரணியாக நாம் கருதுகின்றோம்.

பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, பொய்யான சாட்சியங்களை உருவாக்கி இலங்கை இராணுவத்தை அவமதிக்கும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

புலம்பெயர் அமைப்புகளின் பணம் காரணமாக இங்குள்ள ஒரு சிலரும் இராணுவத்தைக் குற்றஞ்சுமத்தி வருகின்றனர். எவ்வாறு இருப்பினும் ஒரு சில நாடுகளுக்கு இந்த நாட்டின் அமைதியைச் சீர்குலைந்து நாட்டில் இன முரண்பாடுகளை ஏற்படுத்த வேண்டும் என்ற தேவை உள்ளது.

அதற்கான வெளிப்பாடுகள் இன்று ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் வெளிப்பட்டு வருகின்றது. இராணுவம் மீது போர்க்குற்றங்களைச் சுமத்தி அதன் மூலமாக இராணுவத்தைப் பழி தீர்க்க முடியும் என்ற நோக்கம் அவர்களிடம் உள்ளது. ஆனால், இறுதிப் போரில் என்ன நடந்தது என்பது எமக்கு மட்டுமே தெரியும். மனிதாபிமானமாக நாம் முன்னெடுத்த இந்த யுத்த விதிமுறைகள் குறித்து எவரும் எமக்குப் பாடம் கற்பிக்க வரவேண்டிய அவசியம் இல்லை. - என்றார்.

## 'மொட்டு'வின் தலை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷவை நீக்கிவிட்டு, அப்பதவி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட வேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ஸ வெளியிட்டிருந்த கருத்து தெற்கு அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால் விமலுக்கும், மொட்டுக் கட்சிக்காரர்களுக்குமிடையில் கடும் மோதலும் ஏற்பட்டது.

இவ்வாறானதொரு நிலையிலேயே 'தலைமைத்துவம்' குறித்து அமைச்சர் வாசுவும் தற்போது கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசியல் சார்ந்த பொறுப்பொன்றையும் வகிக்க வேண்டும் என்பதே எமது கருத்து. அவரை நிர்வாக அதிகாரியாக மட்டும் ஒதுக்கிவைத்துவிட முடியாது. அவ்வாறு நடந்தால் நிர்வாகத்தை முன்னெடுப்பதற்கான அரசியல் சக்தி அவருக்கு கிடைக்காமல் போகக்கூடும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே எமது தேசியத் தலைவர். அவரை விடவும் எமக்குத் தலைவர் ஒருவர் கிடையாது. எனினும், கட்சித் தலைமைப் பதவியை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கலாம். எமது கூட்டணியின் தலைமைப் பதவியையாவது அவருக்கு வழங்க முடியும் - என்றார்.

## ஈஸ்டர் தாக்குதல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை முழுமையாக வாசிக்காமல் சிலர் குறை கூறுகின்றனர். ஆணைக்குழுவின் பரிந்துரையில் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் நாம் நடைமுறைப்படுத்தமாட்டோம்.

அதில் ஒன்றைக் குறிப்பிட்டுக் கூறுவதென்றால், பௌத்த அமைப்பான பொதுபலசேனா அமைப்பைத் தடை செய்யக் கோரி ஜனாதிபதி ஆணைக்குழுவால் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் அவ்வாறு கூறப்பட்டிருப்பினும் பொதுபலசேனா அமைப்பை நாம் தடை செய்ய மாட்டோம். அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இஸ்லாம் போதனைகளை நடத்தும் மத்ரஸா பாடசாலைகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துவோம்.

மத்ரஸா பாடசாலைகளைக் கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கான முழுமையான அதிகாரம் அரசுக்கும் கல்வி அமைச்சுக்கும் உண்டு.

மத்ரஸா பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள், பாட விதானங்கள் குறித்து ஆழமாக ஆராய்ந்து, அவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்து முடிவு எடுப்போம்.

மத்ரஸா பாடசாலைகளைக் கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கான முழுமையான அதிகாரம் அரசுக்கும் கல்வி அமைச்சுக்கும் உண்டு.

பாதுகாப்பு அமைச்சின் செலாளராகக் கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்ட காலத்தில் வெளிநாட்டுப் பயணிகள் இலங்கை வருவதற்கு விசா வழங்கும் நடைமுறை கடுமையாகப் பின்பற்றப்பட்டது.

புலனாய்வுத்துறையினரின் ஆலோசனைகள் பெற்றதன் பின்னரே வெளிநாட்டுப் பயணி ஒருவருக்கு இலங்கை வருவதற்கான விசா வழங்கப்பட்டு வந்தது.

நல்லாட்சி அரசின் காலப்பகுதியில் அவ்வாறான நடைமுறை ஏதும் பின்பற்றப்படவில்லை. வெளிநாட்டுப் பயணிகளுக்கு 'ஒன் எரய்வல் விசா' வழங்கப்பட்டது. இவையும் நாட்டின் பாதுகாப்புக்கு ஒரு பாதிப்பாகும்.

நாம் சிலரைப் பாதுகாப்பதாகக் கூறுகின்றனர். நாம் யாரையும் பாதுகாக்கவும் இல்லை. யாரையும் கஷ்டத்துக்குள்ளாக்கவும் இல்லை. நல்லாட்சி அரசின் காலத்தில் ஏற்பட்ட தாக்குதலுக்கு நாம் பொறுபேற்க முடியாது.

இந்த அறிக்கை தொடர்பில் மூன்று நாள்கள் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படும். நாளை 10ஆம் திகதியன்று விவாதம் ஆரம்பமாகும். - என்றார்.

## தரம் 5, 11, 13 மார்ச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இன்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் எழுத்து மூல பரிந்துரைக்கு அமையவே மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

உயர்கல்வி அமைச்சில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, மேல் மாகாணத்திலுள்ள ஏனைய தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் ஏப்ரல் விடுமுறையின் பின்னர், எதிர் வரும் ஏப்ரல் 19ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் இணைப்பும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் நாட்டிலுள்ள ஏனைய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளைத் திறப்பதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்பதால், எதிர்வரும் மார்ச் 15ஆம் திகதி அப்பாடசாலைகள் அனைத்தும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சர்வதேசத்தின் பாராமுகமே ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒக்லன்ட் நிறுவனத்தாரால் வெளியிடப்படும் '**Endless War ‡ The destroyed Land, Life and Identity of the Tamils in Sri Lanka** (இலங்கையில் தமிழர்களின் நிலங்கள், வாழ்வு, அடையாளம் ஆகியவற்றை அழித்த முடிவற்ற யுத்தம்) என்ற தலைப்பிலாலான அறிக்கையின் வெளியீட்டு நிகழ்வு இன்று நண்பகல் யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தில் உள்ள யாழ். ஊடக அமையத்தில் மெய்நிகர் முறையில் நடைபெற்ற போது அதில் பங்குபற்றி உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இன்று நாம் அறிமுகப்படுத்தும் அறிக்கை மிகவும் முக்கியமானது. ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் எத்தகைய தீர்மானம் கொண்டுவருவது என்று உறுப்பு நாடுகள் ஆராய்ந்துவரும் வேளையில் இந்த அறிக்கை வெளிவந்திருப்பது மிகவும் பொருத்தமானது.

தமிழ் மக்கள் தமது பூர்வீக இடங்களில் எந்தளவுக்கு தமது நிலங்கள், பாரம்பரிய வாழ்வு முறை, அடையாளம் என்பவற்றை இழந்துகொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையை ஆதாரபூர்வமாக முழு உலகத்துக்கும் மட்டுமன்றி எமது மக்களுக்கும் இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகின்றது. ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் நாடுகளின் கண்களை இந்த அறிக்கை திறக்கும் என்று நான் நம்புகின்றேன். அதேபோல, எமது மக்களின் கண்களையும் இந்த அறிக்கை திறந்து விட்டிருக்கின்றது. இந்த அறிக்கையைத் தமிழிலும், சிங்களத்திலும் மொழி பெயர்த்து நாம் விநியோகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

தமது நிலங்கள் பறிபோகின்றன, புராதன சின்னங்கள் அழிக்கப்படுகின்றன, தமது வாழ்வாதாரம் சுரண்டப்படுகின்றது என்று தமிழ் மக்கள் கடந்த 12 வருடங்களாக ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும், உண்ணாவிரதங்களையும் நடத்தி வந்துள்ளார்கள். ஆனால், அவற்றை சர்வதேச சமூகம் கவனத்தில் கொண்டு காத்திரமான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்திருந்திருக்கவில்லை. இதனால் தான் இன்று நிலைமை இந்தளவுக்கு மோசம் அடைந்திருக்கின்றது. தமிழ் மக்களின் நூற்றாண்டுகால பழைமை வாய்ந்த வணக்கஸ்தலங்களை வலிகாமம் வடக்கில் இடித்து தரைமட்டம் ஆக்கி அவற்றின் மீது இராணுவ மாளிகைகளை கட்டும் அளவுக்கு இராணுவம் இன்று செயற்படுகின்றது என்றால் அதற்கு சர்வதேச சமூகத்தின் பராமுகமே காரணமாகும். அதேபோல முல்லைத்தீவில் மிகவும் பாரதூரமான அளவில் இராணுவமயமாக்கலும், பௌத்தமயமாக்கலும் நடைபெறுவதை இந்த அறிக்கை அம்பலப்படுத்துகின்றது. 100 இற்கும் மேற்பட்ட முகாம்கள் முல்லைத்தீவில் இருப்பதும், 67 விகாரைகள் யுத்தம் முடிவடைந்த பின்னர் கட்டப்பட்டிருப்பதும் நாம் எத்தகைய அடக்குமுறைக்குள் வாழ்கின்றோம் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

ஆகவே, சர்வதேச சமூகம், இலங்கை விடயத்தில் இனிமேலும் அரசியல் ரீதியான அணுகுமுறையைப் பின்பற்றாமல் மனித உரிமைகள் அடிப்படையிலான **(Human Rights Based approach)** ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடித்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மனித உரிமைகள் சபை ஆணையாளர் பச்லட் அம்மையார் அவர்களின் அறிக்கை அத்தகைய மனித உரிமைகள் அடிப்படையிலான ஓர் அணுகுமுறையை கொண்டிருக்கின்றது. ஆனால், தற்போது, மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பூஜ்ய அறிக்கை அரசியல் அணுகுமுறை அடிப்படையில் அமைந்திருப்பதே பாதிப்புக்குக் காரணமாகியுள்ளது.

இந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் பெரிதும் அதிர்ச்சி அளிப்பனவாக இருக்கின்றன. ஆனால் எமக்கு மேலும் அதிர்ச்சி அளிக்கக் கூடிய பல்வேறு மனித உரிமை மீறல்கள் இங்கே வடக்குக் கிழக்கில் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று கொள்ள இடமிருக்கின்றது. இவை வெளியே தெரியாமல் நடைபெறுகின்றன என்று கருத முடியும். குறிப்பாக, வலி வடக்கில் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் மேலும் எத்தனை கோவில்களும், தேவாலயங்களும், பாடசாலைகளும் தரைமட்டம் ஆக்கப்பட்டு, இராணுவ மாளிகைகளும், முகாம்களும் அவற்றின் இடங்களில் அமைக்கப்பட்டுள்ளனவோ எமக்கு உத்தியோகபூர்வமாகத் தெரியாது. அதனால்த் தான் சர்வதேச சுயாதீன விசாரணை வேண்டும் என்று நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

அனுராதா மிட்டால் வெளியிட்டிருக்கும் '**Endless War**' என்ற இந்த அறிக்கை, அத்தகைய ஒரு சர்வதேச சுயாதீன விசாரணையின் அவசியத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இனியாவது உலக சமூகம் இங்கு, எமது வடக்குக் கிழக்கில், நடக்கும் விடயங்களைத் தமது கண்களைத் திறந்து பார்த்து, அவற்றை அவர்தம் கருத்தில் எடுத்து, உரிய அவசர நடவடிக்கைகளை எடுப்பார்களாக - என்று உள்ளது.

## குற்றவாளிகள் யார் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் யார்? அவருடன் நேரடியாகத் தொடர்புபட்ட நபர்கள் யார்? ஐ.எஸ். அமைப்புடன் எவ்வாறு இவர்கள் தொடர்புகளை ஏற்படுத்தினர்? இந்தத் தாக்குதலின் பின்னணி என்ன? போன்ற விடயங்கள் ஆணைக்குழு அறிக்கை மூலம் வெளி வரும் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால், அந்த விசாரணை அறிக்கையில் அவ்வாறான தகவல்கள் எதுவும் இல்லை.

சம்பவத்துக்கு முன்னரே கிடைத்ததாகக் கூறப்படும் இந்தியப் புலனாய்வுத் தகவலை எனக்கு அறிவித்திருந்தால் எந்த வழியிலேனும் தாக்குதலைத் தடுத்திருப்பேன்.

ஜனாதிபதி நாட்டில் இல்லாத நேரத்தில் நான் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு செயற்பட்டதனாலேயே தாக்குதல் நடத்தப்பட்டு ஒன்பது மணித்தியாலங்களுக்குள் தாக்குதலுடன் தொடர்புபட்ட சகலரையும் கைதுசெய்யவும், நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் முடிந்தது.

இவ்வாறு துரிதமாகச் செயற்பட்டமை குறித்து வெளிநாடுகள் கூட ஆச்சரியப்பட்டன - என்றார்.

## சிறைச்சாலைக்குள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு சென்று ரஞ்சனிடம் சுகநலம் விசாரித்த அவர், 'செல்பி'யும் எடுத்துக் கொண்டு, அதனை முகநூலில் பதிவிட்டார். அந்தப் படம் சமூகவலைத்தளங்களில் வைரலானது.

இந்நிலையில், சிறைக்குள் 'செல்பி' எடுப்பதற்கு அனுமதி வழங்கிய சிறைச்சாலை அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமையை, ஹர்ஷன எம்.பி., தவறாகப் பயன்படுத்தியுள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## விசாரணை ஏன் அவசியம்?

**இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்வதற்கு இலங்கை அரசுக்கு திடசங்கற்பம் – பற்றுறுதி – இல்லை என்பதற்கு அப்பால் அதனை விசாரிப்பதற்கான அடிப்படைத் தகுதி கூட அதற்குக் கிடையாது என்பதுதான் தமிழர்களின் நிலைப்பாடு.**

**கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக இந்த விடயத்தில் அதிகப் பிரசங்கத்தினம் காட்டி வரும் இலங்கையின் சிந்தனைப் போக்கு, நிலைப்பாடு யாது என்பது சர்வதேசத்துக்கும் தெரியும்.**

**அப்பாவிப் பொதுமக்களுக்கு ஓர் இழப்பும் ஏற்படுத்தாமல், அப்பாவிப் பொதுமக்களின் ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்த வைக்காமல், இந்த யுத்தம் வெல்லப்பட்டதாக தனக்குத் தானே நற்சான்றிதழ் கூறியவர்தான் இன்றைய ஜனாதிபதியும், யுத்த கால பாதுகாப்புச் செயலாளருமான கோட்டாபய ராஜபக்ஷ.**

**இலங்கையில் இடம்பெற்ற யுத்த கால அத்துமீறல்கள் தொடர்பில் அரசுப் படைகளுக்கு எதிராக நீதி விசாரணை என்ற பெயரில் ஒரு துரும்பைக் கூட அசைக்க விடாத பௌத்த, சிங்கள பேரினவாத வெறிப்போக்குக் கொண்ட ஆட்சிப் பீடமே இன்று அதிகாரத்தில் உள்ளது.**

**யுத்த காலத்தில் தமிழர் தேசத்தின் மீது இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள், இனவழிப்பு நடவடிக்கைகள் குறித்து இந்த ஆட்சிப் பீடம் மூலமே நீதி விசாரணை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கச் செய்து, மீள நிகழாமையை உறுதிப்படுத்த முடியும் என சர்வதேச சமூகம் இனியும் நம்பிக் காத்திருப்பது, 'குளம் வற்றும் என்று காத்திருந்து குடல் வற்றிச் செத்த கொக்கின் கதையாகத்தான்' முடியும்.**

**இலங்கையில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு கொழும்பு அரசு நீதி தேடாது என்பது அதன் அதிகார வர்க்கம் தொடர்ந்து வெளியிட்டு வரும் கருத்துரைகளால் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டே வருகின்றது.**

**சிங்களத்தின் அனைத்துத் தலைவர்களும் – அவர்கள் ஆளுங்கட்சியில் இருந்தாலும் சரி, எதிர்கட்சியில் இருந்தாலும் சரி – சொல்லும் சூத்திரம் ஒன்றுதான். அது எந்தப் படைக்கும், படை வீரனுக்கும் எதிராக எந்த விசாரணைக்கும் இடம்கொடுக்க மாட்டோம், அனுமதிக்க மாட்டோம் என்பதுதான்.**

**விசாரணை இல்லாமல் உண்மை வெளிவர மாட்டாது. படையினரை, படைகளை நீதிமுறையான விசாரணையின் முன் நிறுத்தினால் உண்மை வெளியாகிவிடும் என்பது சிங்களத்திற்கு நன்றாக – மிக மிக நன்றாக – தெரியும். அதனால்தான் அது நீதி விசாரணைக்கு மறுத்து நிற்கின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.**

**எது, எப்படி என்றாலும் சர்வதேச நியமங்களுக்கு அமைவான நீதி விசாரணைக்கு அனைத்துலக அழுத்தம் கொழும்பின் கழுத்தை இறுக்கி வருவதைப் புரிந்து கொண்டுள்ள ஆளும் தரப்பு அதிலிருந்து தப்புவதற்கு அவ்வப்போது புதுப்புதுக் கதைகளை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றது.**

**ஆனால், அக்கதைகள் எல்லாம் இவ்விடயத்தில் இலங்கையில் – கொழும்பு அரசின் – சுத்துமாத்துப் போக்கைத் தோலுரித்துக் காட்டுவனவாக இருப்பதுதான் முக்கிய அம்சம்.**

**இந்த வகையில் இலங்கையின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும், அண்மைக் காலத்தில் பௌத்த, சிங்கள வெறிப் போக்கை மோசமாக பிரதிபலித்து வருபவருமான சரத் வீரசேகர வெளியிட்ட கருத்து முக்கியமானது.**

***"வடக்கு, கிழக்கில் போரின்போது தமிழீழ விடுதலைப் புலிகளும், அவர்களின் நெருங்கிய சகாக்களுமே காணாமல் போயினர். தமிழ் மக்கள் எவருமே காணாமல் போகவில்லை"* என்று புதுக் கண்டுபிடிப்பை அவர் வெளியிட்டிருக்கின்றார்.**

**பௌத்த, சிங்கள வெறிப் போக்கின் திமிர்த்தனக் கருத்தே இது.**

**ஒன்று – பல்லாயிரக் கணக்கில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்கள் பற்றிய விடயங்கள் ஐ.நா. தொடர்பான சர்வதேச ஆவணங்களிலேயே உள்ளன.**

**அடுத்தது – அப்பாவிகளை எல்லாம் கண்மூடித்தனமாகக் கொன்றொழித்து விட்டு அவர்களுக்கு புலிச்சாயம் பூசுவதுதான் இலங்கை அதிகார பீடத்தின் கொடூரப் பண்பியல்பு என்பதைத் தமிழர் தரப்பு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றது. அதற்குப் பளிங்குக் கல் போன்ற சாட்சியம்தான் அமைச்சர் சரத் வீரசேகரவின் கருத்து.**

**மூன்றாவது 'புலிகள் எல்லாம் தமிழ் மக்கள்; தமிழ் மக்கள் எல்லாம் புலிகள்' என்ற சிங்களத்தின் பேரினவாத வெறிச் சிந்தனையின்படி அவர்கள் எல்லோரும் புலிகளாகவே இருக்கட்டும். ஆனால் அவர்கள் புலிகளாக இருந்தாலும் அவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டமைக்கு நீதி விசாரணை அவசியம். அதைத் தான் சர்வதேசமும் இப்போதும் வலியுறுத்துகின்றது என்பதை சரத் வீரசேகர புரிந்து கொள்ள வேண்டும்.**

# 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தியிருந்தால் ஜெனிவாவின் பிரேரணை வந்திருக்காது!

### எதிர்க்கட்சி சாடல்

நீதியை நிலைநாட்ட முன்நிற்பதாக சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளில் இருந்து விலகியமையே இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் பிரேரணை கொண்டுவரக் காரணம் என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

13 ஆவது அரசமைப்பு திருத்தத்தை அரசாங்கம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தியிருந்தால் இலங்கைக்கு எதிராக இந்தப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டிருக்கா என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், தமது கட்சி, நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முன்னின்று செயற்படும் என்றும் கூறினார்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் பிரேரணையை தோற்கடிக்க பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ள




அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

ஜெனிவா தீர்மானம் நாட்டில் தற்போதைய ஜனநாயக விரோத நடவடிக்கைகள், இராணுவமயமாக்கல் மற்றும் மனித உரிமை மீறல் உள்ளிட்ட சம்பவங்களை மேற்கோளிட்டுள்ளது என்பதை ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் இந்த அரசாங்கம் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுடனான மோதலை மட்டுமே அனைத்து அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டுவதாக ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

# அசோக் அபேசிங்கவுக்கு சி.ஐ.டியினர் அழைப்பு!



கொழும்பு, மார்ச் 09

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்கவை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக அவர் வெளியிட்ட கருத்து குறித்து விசாரணை மேற்கொள்ளவே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்கவை இன்று முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# ஆபத்தான வெடிமருந்துகள் யாழ். செம்மணி பகுதியில் மீட்பு!

யாழ்ப்பாணம் – செம்மணி இந்து மயானத்தில் சுமார் 5 கிலோ நிறைகொண்ட ஆபத்தான வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நல்லூர் – செம்மணி வீதியின் வடக்கே உள்ள இந்து மயானத்தில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதனை அடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவின் அடிப்படையில் சிறப்பு அதிரடிப்படையினரால் மேற்படி வெடிமருந்துகள் மீட்கப்பட்டன.

3 கிலோ 750 கிராம் சி – 4 மற்றும் ரி.என்.ரி. வெடிமருந்துகள் டெட்டனேற்றர்கள்



அதற்கான வயர்கள் என்பன மீட்கப்பட்டன

குறித்த வெடிமருந்துகள் அனைத்தும் தற்போது நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

# அமைச்சரவை உப குழு அறிக்கை 15 இல் ஜனாதிபதி கோட்டாவிடம்!



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை இறுதி அறிக்கையை ஆய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த அமைச்சரவை உபகுழுவின் அறிக்கை எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, உதய கம்மன்பில, ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரணதுங்க மற்றும் ரோஹித அபேகுணவர்தன ஆகியோர் குறித்த அமைச்சரவை உப குழுவில் உள்ளனர்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை நாளை 10 ஆம் திகதி நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற விசேட கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கைக்குழந்தையுடன் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திய பெண் போலிஸ்



சண்டிகர் போக்குவரத்து பொலிஸில் பிரியங்கா என்பவர் பொலிஸாக பணிபுரிந்து வருகிறார். இவருக்கு சமீபத்தில் குழந்தை பிறந்தது. 6 மாத மகப்பேறு விடுமுறைக்கு பிறகு கடந்த 3 ஆம் திகதி அவர் மீண்டும் பணியில் சேர்ந்தார்.

கடந்த 5 ஆம் திகதி பிரியங்கா தனது கைக்குழந்தையுடன் பணிக்கு வந்து போக்குவரத்தை ஒழுங்கு படுத்தினார். அந்த வழியாக சென்ற வாகன செலுத்துனர்கள் பிரியங்கா கைக்குழந்தையுடன் நின்றபடியே பணியாற்றுவதை வீடியோ எடுத்து சமூக வலைத்தளங்களில் வெளியிட்டனர்.

இந்த வீடியோ வைரல் ஆகி வருகிறது. அவருக்கு சமூக வலைத்தளங்களில் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

இதுதொடர்பாக பெண் பொலிஸ் பிரியங்கா கூறியதாவது:-

எனது மகன் குறை மாதத்தில் பிறந்துள்ளான். எனது கணவரும் குடும்பத்தினரும் மகேந்திரகர் பகுதியில் வசித்து வருகிறார்கள். எனவே சண்டிகரில் எனது வீடு அருகே பணி ஒதுக்கும்படி கேட்டு இருந்தேன்.

2 நாள்கள் எனது வீட்டுக்கு அருகே பணி ஒதுக்கப்பட்டது. கைக்குழந்தையுடன் போக்குவரத்தை ஒழுங்கு படுத்தினேன். ஆனால் 3 ஆவது நாளில் தொலைவில் உள்ள செக்டர் - 29 பகுதியில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணி கொடுத்தனர்.

எனது குழந்தையை தனியாக விட்டுச்செல்ல முடியாது என்பதால் அவனை கையில் தூக்கிச் சென்றேன். தற்போதைக்கு எளிதான பணி வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளேன். இதை உயர் அதிகாரி ஏற்றுக்கொண்டுள்ளார்.

# கேரளாவில் 5 கூட்டங்களில் பிரதமர் மோடி பேசுகிறார்

கேரளாவில் கம்யூனிஸ்ட் கூட்டணி, காங்கிரஸ் கூட்டணி இடையே யார் ஆட்சியை பிடிப்பது? என்பதில் கடும் போட்டி நிலவுகிறது.

அதே நேரத்தில் பா.ஜனதாவும் இங்கு செல்வாக்கை அதிகரித்து கொள்வதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இதற்காக பா.ஜனதா முன்னணி தலைவர்கள் கேரளாவில் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார்கள்.

தேர்தல் அறிவிப்புக்கு முன்பாகவே பிரதமர் மோடி, அமித்ஷா, ஜே.பி.நட்டா உள்ளிட்ட தலைவர்கள் பிரசாரம் செய்தார்கள். இப்போது தேர்தல் அறிவிப்பு வந்துள்ள நிலையில் மீண்டும் அவர்கள் பிரசாரம் மேற்கொள்கிறார்கள்.

பிரதமர் மோடி கேரளாவில் சுற்றுப்பயணம் செய்து 5 பிரசார கூட்டங்களில் பங்கேற்க திட்டமிட்டுள்ளார். அதே போல அமித்ஷா 7 நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.



அங்கு நடைபெறும் மலப்புரம் எம்.பி. தொகுதி இடைத்தேர்தலில் பா.ஜனதா சார்பில் அப்துல்லாகுட்டி நிறுத்தப்பட உள்ளார். இதன் மூலம் முஸ்லிம்களின் வாக்குக்களை அதிகமாக பெறலாம் என பா.ஜனதா கருதுகிறது.

# தனியார் மருத்துவமனையில் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்ட ஸ்டாலின்




இந்தியாவில் கொரோனா தடுப்பூசி போடும் பணி கடந்த ஜனவரி 16 ஆம் திகதி தொடங்கி நடந்து வருகிறது. முதற்கட்டமாக சுகாதார பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கு தடுப்பூசி போடும் பணி தொடங்கி நடைபெற்றது.

2 ஆவது கட்டமாக 60 வயதை எட்டிய அனைவருக்கும், இணை நோய்களை கொண்ட 45 வயதை கடந்தவர்களுக்கும் நேற்று திங்கட்கிழமை முதல் கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனைக்கு சென்று கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொண்ட பிர தமர் மோடி தகுதியுள்ள அனைவரும் கொரோனா தடுப்பூசியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இதேபோல் தடுப்பூசி போடுவதில் பொதுமக்களிடையே உள்ள தயக்கம் மற்றும் அச்ச உணர்வை போக்குவதற்காக பல்வேறு தலைவர்கள் மற்றும் பிரபலங்கள் தடுப்பூசி போட்டுக்கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இந்நிலையில் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் முதல் டோஸ் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்டார்.

# புதுச்சேரியில் தொகுதி உடன்பாடு

புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் கட்சி 16 தொகுதிகளிலும் கூட்டணி கட்சிகளாக பா.ஜ.க., அ.தி.மு.க., பா.ம.க. 14 தொகுதிகளிலும் போட்டியிட உள்ளன என என். ஆர். காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி அறிவித்துள்ளார்.

புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க. இடையிலான தொகுதி பங்கீடு பேச்சில் கடந்த சில நாள்களாகவே இழுபறி நீடித்து வந்த நிலையில், தற்போது சுமூக உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஹி.யூ.காங்கிரஸ், பா.ஜ.க., அ.தி.மு.க. இணைந்து வரும்




சட்டமன்ற பொதுத்தேர்தலை சந்திக்கிறது. ஆலோசனை கூட்டத்திற்கு பின் பா.ஜ.க. மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா, அ.தி.மு.க. மாநில செயலாளர் அன்பழகன் உள்ளிட்ட கூட்டணி கட்சியின் நிர்வாகிகளுடன் என்.ஆர். காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், என்.ஆர். காங்கிரஸ் 16 தொகுதிகளிலும், பா.ஜ.க. மற்றும் அதிமுக, பா.ம.க. 14 தொகுதிகளிலும் போட்டியிடுவது என ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

என்.ஆர். காங்கிரஸ் தலைமையில் தேர்தலை சந்திக்க இருப்பதாக பா.ஜ.க. மேலிட பொறுப்பாளர் நிர்மல்குமார் சுரானா தெரிவித்தார்.

## எல்லையில் ஒருவார காலமாக வன்முறைகள் நிகழவில்லை

### இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவிப்பு



கடந்த ஒருவார காலமாக எல்லைப்பகுதியில் எந்த வன்முறைச் சம்பவமும் நிகழவில்லை என்றும் பூரண அமைதி நிலவுவதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எல்லைத்தாண்டி பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி துப்பாக்கிச் சூடு நடத்தி வந்ததால் எல்லையில் எப்போதுமே பதற்றமான நிலை காணப்பட்டது. இந்நிலையில் இந்தியா - பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் பேச்சை அடுத்து இருதரப்பினரும் போர் நிறுத்தத்தை கடைபிடிக்க உறுதி செய்தனர்.

இந்த உடன்படிக்கைக்குப் பிறகு துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்து எல்லையில் அமைதி நீடிக்கிறது.

## பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே. அத்வானி கொரோனாத் தடுப்பூசி போட்டுக்கொண்டார்




நாடு முழுவதும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்றுவருகிறது. இது வரை மொத்தம் 2 கோடி 30 லட்சத்திற்கும் அதிகமான கொரோனாத் தடுப்பூசிடோஸ்கள் செலுத்தப் ட்டுள்ளது.

இதற்கிடையில், கடந்த 1 ஆம் திகதி முதல் 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கியுள்ளது. இதில் 60 வயதிற்கு மேற்பட்ட பொதுமக்களும், அரசியல் தலைவர்களும், சினிமா பிரபலங்களும் தடுப்பூசி போட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பா.ஜ.க. மூத்த தலைவரான எல்.கே. அத்வானி இன்று கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொண்டார். 93 வயதான எல்.கே. அத்வானிக்கு டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் இன்று கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தப்பட்டது.

## தவறை தட்டிக்கேட்ட ஆசிரியர் துப்பாக்கியால் சுட்ட மாணவன்

உத்தரப் பிரதேசத்தில் மாணவன் ஒருவன் ஆசிரியரைத் துப்பாக்கியால் சுட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் காசியாபாதில் உள்ள சரஸ்வதி விஹார் காலனியில் தனியார் பள்ளி ஒன்று அமைந்துள்ளது. அங்கு சச்சின் தியாகி என்பவர் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வணிகவியல் ஆசிரியராக இருந்தார். பள்ளியில் அவர் பாடம் நடத்தி கொண்டிருக்கும் போது, மாணவன் ஒருவன் தன் நண்பர்களுடன் சேர்ந்து சக மாணவர்களிடம் தவறாகவும், கடுமையாகவும் நடந்து கொண்டதாகக் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, ஆசிரியர் சச்சின் தியாகி, அந்த மாணவனையும் அவன் நண்பர்களையும் அழைத்து அறிவுரை வழங்கியதோடு மீண்டும் எந்த தவறும் செய்யக்கூடாது என்று கூறி எச்சரித்து அனுப்பியதாகக் தெரிகிறது.

தொடர்ந்து, கடந்த சனிக்கிழமை மதியம், வகுப்புகளை முடித்துவிட்டு சச்சின் தியாகி வீடு திரும்பியுள்ளார். அப்போது அவர் செல்லும் வழியில், வகுப்பில் அவர் கண்டித்த மாணவனும் அவன் நண்பர்களும் சச்சின் தியாகியின் இரு சக்கர வாகனத்தை வழிமறித்து நின்றுள்ளனர். திடீரென வந்த மாணவர்களைக் கண்டு சச்சின் தியாகி குழம்பிப்போய் நின்றார். அவர் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில், மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை எடுத்த மாணவன், சச்சின் தியாகியை நோக்கிச் சுட்டான். அதில் சிறிய காயங்களுடன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய சச்சின் தியாகி, சிகிச்சைக்காக மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டார். இதனால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மாணவன் மீதும் அவன் நண்பர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு தீவிர விசாரணை நடந்து வருகிறது. பள்ளி மாணவர்களுக்குத் துப்பாக்கி எப்படிக் கிடைத்தது பல்வேறு கோணங்களில் விசாரணை நடைபெற்று வருகிறது.

மேலும், மாணவர்களின் பெற்றோர்களையும் காசியாபாத் காவல்துறையினர் விசாரணைக்கு அழைத்துள்ளனர். மாணவர்களின் தொலைபேசியும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.

# இங்கிலாந்து அரச குடும்பத்தினர் மீது ஹாரியின் மனைவி மேகன் விமர்சனம்

இங்கிலாந்து அரச குடும்பத்தினரால் தான் நிறவெறியுடன் நடத்தப்பட்டதாகவும், இதனால் தற்கொலை செய்து கொள்ளும் மனநிலைக்கு வந்ததாகவும் ஹாரியின் மனைவி மேகன் மெர்கல் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அரச குடும்பத்தில் பிறந்த இளவரசர் ஹாரி அமெரிக்க கறுப்பினத்தைச் சேர்ந்த நடிகையான மேகன் மெர்கலை காதலித்து திருமணம் செய்து கொண்டார். பின்னர் இருவரும் அரச குடும்பத்தில் இருந்து விலகுவதாக அறிவித்தனர்.

இந்நிலையில் தொலைக்காட்சித் தொகுப்பாளரான ஓபரா வின்ஃப்ரேவின் நிகழ்ச்சியில் ஹாரியும், மெர்கலும் பங்கேற்றனர். அப்போது மனம் திறந்து பேசிய மேகன் மெர்கல், இளவரசர் வில்லியம் மற்றும் அவரது மனைவி கேத் மிடில்டன் ஆகியோர் மீது சரமாரியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்.



குழந்தை பிறக்கும் வரை தான் மோசமான சூழ்நிலையை எதிர்கொண்டதாகக் கூறிய மேகன், அரச குடும்பத்தினராலும், இங்கிலாந்து ஊடகங்களாலும் தான் வேறுவிதமாக நடத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். அரச குடும்பத்தால் தான் கடுமையாக நடத்தப்பட்டதாக் கூறிய அவர், அதனை விவரிக்க இயலாது என்று குறிப்பிட்டார்.

இங்கிலாந்து அரச குடும்பத்து உறுப்பினர்களால் தான் தனிமைப்படுத்தப்பட்டதைப் போல உணர்ந்ததால், தற்கொலை செய்து கொள்ளும் மனநிலைக்குத் தள்ளப்பட்டதாவும் மேகன் மெர்கல் கூறினார். அப்போது உடனிருந்த இளவரசர் ஹாரி, அதனை ஆமோதிப்பது போல மெர்கல் சிக்கிக் கொண்டதாகக் கூறினார்.

தனக்குத் தெரியாமல் தானே சிக்கிக் கொண்டதாவும், தனது தந்தையும், சகோதரரும் தன்னை சிக்கவைத்து விட்டதாகவும் ஹாரி பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். தனது தந்தையான இளவரசர் சார்லஸை தனக்கு அதிகம் பிடிக்கும் என்று கூறிய அவர், ஒரு கட்டத்தில் தனது பிரச்சினைகள் குறித்து பேச விரும்பிய போது, அதனை சார்லஸ் கேட்க விரும்பவில்லை என்றும் ஹாரி குறிப்பிட்டார்.

## பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி லெபனானில் மக்கள் போராட்டம் நீடிப்பு



லெபனான் நாடு கடந்த ஓராண்டுக்கும் மேலாக மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அத்துடன் அரசியல் முட்டுக்கட்டையும் நீடிக்கிறது. இதற்கு தீர்வு காண வலியுறுத்தி நாடு முழுவதும் மீண்டும் போராட்டம் வெடித்துள்ளது. இன்று 8வது நாளாக போராட்டம் நீடிக்கிறது.

நேற்று 7வது நாளாக ஜுக், ஜல் அல்-டிப் மற்றும் அல்-தவ்ராவிலிருந்து தெற்கே தலைநகர் பெய்ரூட்டுக்குச் செல்லும் மூன்று முக்கிய சாலைகளை மறித்து போராட்டக்காரர்கள் போராட்டம் நடத்தினர். சாலைகளின் நடுவே டயர்களை கொளுத்தினர். இதனால் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. பெய்ரூட்டில், எதிர்ப்பாளர்கள் மத்திய வங்கியின் முன் சிறிது நேரம் சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.

நெருக்கடிகளுக்கு தீர்வு காண அரசு எதுவும் செய்யாததால், போராட்டத்தை தீவிரப்படுத்துவோம் என்று நாங்கள் பலமுறை கூறினோம் என போராட்டக்குழுவினர் கூறுகின்றனர். டயர் பகுதியில் நடைபெற்ற போராட்டத்தின்போது, ஒருவர் தன் உடலில் பெற்றோல் ஊற்றி தீவைக்க முயன்றதாகவும், பொலிஸார் சரியான நேரத்தில் அவரை தடுத்துவிட்டதாகவும் செய்தி வெளியாகி உள்ளது.

2019 இல் ஆரம்பித்த லெபனானின் நிதி நெருக்கடி, 60 லட்சம் மக்கள் தொகை யில் கிட்டத்தட்ட பாதி மக்களை வறுமையில் தள்ளியுள்ளது. வேலை வாய்ப்புகள் மற்றும் மக்களின் சேமிப்புகளை அழித்துவிட்டது. நுகர்வோர் வாங்கும் சக்தியைக் குறைத்துவிட்டது.

பொருள்களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளதால். நாட்டின் பண மதிப்பு கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இன்று செவ்வாய்க்கிழமை டொலருக்கு நிகரான லெபனான் பவுண்டின் மதிப்பு 10,000 ஆக வீழ்ச்சியடைந்தது. இறக்குமதியை பெரிதும் நம்பியுள்ள நிலையில், பண மதிப்பு இந்த அளவிற்கு குறைந்துபோனதால், எதிர்ப்பாளர்கள் தினமும் சாலைகளை மறித்து போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

## வித்தியாசமான முறையில் வாழ்த்து ரஷ்ய இராணுவ வீரர்கள் அசத்தல்







*சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ரஷ்ய இராணுவ வீரர்கள் ஸ்கை டைவிங் செய்து அசத்தினர்.*

*பின்னர் பரசூட் உதவியுடன் கீழிறங்கி வந்த இராணுவ வீரர்கள் உடன் பணிபுரியும் பெண்களுக்கு, பொது இடங்களில் நின்று கொண்டிருந்த பெண்களுக்கும் ரோஜா பூக்களை பரிசாக வழங்கினர்.*

*அதேபோல் இவானோவோ நகரில் உள்ள வணிக வளாகத்துக்கு சென்ற இராணுவ வீரர்கள், அங்கு வந்த பெண்களுக்கு பலூன்களை பரிசாக வழங்கினர்.*

## நாட்டின் பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் மருதாணியை கொண்டு ஓவியம் வரையும் பெண்

ஜோர்டான் நாட்டின் பெண் ஓவியர் ஒருவர், மருதாணியை பயன்படுத்தி ஓவியங்களை வரைந்து வருகிறார்.



ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் கைகளில் மருதாணியிடும் வழக்கம் உள்ள நிலையில், ஜோர்டானைச் சேர்ந்த பல்கீஸ் அல் அபாடி என்ற 23 வயது பெண், வழக்கமான ஓவிய நிறப்பூச்சுக்கு பதிலாக மருதாணியை கொண்டு அந்நாட்டின் பாரம்பரியத்தை பறைசாற்றும் ஓவியங்களாக வரைந்து வருகிறார்.

மேலும், இது குறித்த பயிற்சியை 12 இற்கும் மேற்பட்ட பெண்களுக்கு அளித்து தொழில் முனைவோராகவும் மாற்றி உள்ளார்.

## பெண்களுக்கு சம உரிமை வழங்கக்கோரி லத்தீன் அமெரிக்காவில் பேரணி!



பெண்களுக்கு சம உரிமை வழங்க வலியுறுத்தி லத்தீன் அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான பெண்கள் பேரணியில் ஈடுபட்டனர்.

சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி ஆர்ஜென்டினா, கொலம்பியா, சிலி உள்ளிட்ட நாடுகளில் பேரணியில் ஈடுபட்ட பெண்கள், சம உரிமை வழங்க வேண்டும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், பணியிடங்களில் பாதுகாப்பு வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

லத்தீன் அமெரிக்காவில் சுமார் 30 சதவீதம் பேர் தங்கள் நெருங்கிய கூட்டாளிகளாலும், 11 சதவீதம் பேர் வெளி நபர்களாலும் வன்கொடுமைக்கு ஆளாவதாகவும் உலக சுகாதார அமைப்பின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## சிரியா அதிபருக்கு கொரோனா தொற்று



சிரியா அதிபர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அதிபர் ஆசாத் மற்றும் அவரது மனைவி அஸ்மா ஆசாத் ஆகிய இருவருக்கும் கொரோனா பரிசோதனையில் அவர்களுக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து மருத்துவர்களின் ஆலோசனைப்படி இருவரும் தங்களை தனிமைப்படுத்திக் கொண்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கொரோனா தாக்குதலின் ஓராண்டு நிறைவு அதிபர் பைடன் நாட்டு மக்களிடையே உரை

கொரோனா வைரஸ் தாக்குதலின் ஓராண்டு நிறைவை ஒட்டி அதிபர் பைடன் எதிர்வரும் வியாழன் அன்று தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களிடையே உரையாற்றவுள்ளார்.



இதுதொடர்பாக பேசிய வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் Jen Psaki, இந்த உரையின் போது கடந்த ஆண்டு கொரோனாவிற்காக அமெரிக்க மக்கள் செய்த தியாகங்கள் பற்றி நினைவு கூர்வார் என்றார்.

இதற்கிடையில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் கொரோனா மீட்பு நிதிக்காக ரூ.139 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யும் பிரேரணை வெற்றிகரமாக நிறைவேறியது.

இதன் மூலம் ஒவ்வொரு அமெரிக்கரும் தலா 1,400 டொலர் நிதியுதவி பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஓட்டமாவடி பகுதியில் இதுவரை 31 ஜனாஸாக்கள் நல்லடக்கம்

மட்டக்களப்பு, மார்ச்.09

கொரோனாவால் மரணமடைந்தவர்களின் ஜனாஸாக்கள் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் நல்லடக்கம் செய்யும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நான்காவது நாளாகவும் இடம்பெற்றது, திங்கள் மாலை 05 மணிவரை ஏழு ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தெரிவித்தார்.

இதில் ஆறு ஆண்களும் ஒரு பெண்ணுமாக ஏழு ஜனாஸாக்கள் திங்கட்கிழமை அடக்கம் செய்யப்பட்டுள்ளமையுடன் இவர்கள் பெகலியாகொடை, மட்டக்குளி, மல்வானை, ஹீனுபிட்டி களனி, குருணாகல் ஆகிய பிரதேசங்களில் இருந்து தலா ஒருவரது ஜனாஸாவும் திஹாரி பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு ஜனாஸாக்களும் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கொரோனா தொற்றால் மரணிக்கும் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

இதற்கமைய நான்கு தினங்களில் 31 ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என பிரதேச செயலாளர் வீ.தவராஜா மேலும் தெரிவித்தார்.

# தற்கொலைக்கு முயன்ற பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

தனக்குத்தானே தீயிட்டு தற்கொலைக்கு முயற்சிசெய்த இளம் குடும்பப்பெண் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு நொச்சிமுனை இசைநடனக்கல்லூரி வீதி,முதலாம் குறுக்கு வீதியினைச்சேர்ந்த ஒரு குழந்தையின் தாயான அஜந்தன் லோஜினி (வயது -27) என்பவரே கடந்த ஞாயிற்றுக்கிழமை கணவருடன் ஏற்பட்ட சிறு தகராற்றால் தனக்குத்தானே மண்ணெண்ணெயை ஊற்றி தனது வீட்டின் அறையில் தீயிட்டு தற்கொலைக்கு முயற்சி செய்த நிலையில் தீக்காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயரிழந்துள்ளார் என விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவானின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற காத்தான்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வேலு மணிமாறன் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனையின் பின்னர் பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# டெங்கால் மாணவன் உயிரிழப்பு

*இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில், காதியார் வீதி பகுதியில் வசிக்கும் பஜிர் நாதிர் எனும் மாணவன் டெங்குக் காய்ச்சலால் மரணித்துள்ளார்.*

*பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முதல் நாள் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மாணவன் மரணித்துள்ளார்.*

# மட்டு.வில் ஓட்டோ விபத்தில் அகப்பட்ட வயோதிபர் சிகிச்சை பலனின்றி பலி!

மட்டக்களப்பு சந்திவெளி பிரதேசத்தில் இருந்து செங்கலடி பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட வயோதிபர் மீது ஓட்டோ மோதியதில் படுகாயம் அடைந்த வயோதிபர் சிகிச்சை பலனின்றி உயரிழந்துள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சத்தார் வீதி மாவடிவேம்பு - 02 எனும் முகவரியைச் சேர்ந்த செல்லன் அருணாச்சலன் (வயது - 61) செங்கலடி பிரதான வீதியூடாக வாழைச்சேனை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோ, அதே வீதியூடாக சைக்கிளில் வீதியைக் கடக்க முற்பட்ட குறித்த நபர் மீது மோதியதில் படுகாயம் அடைந்த நிலையில் சந்திவெளி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி திங்கட்கிழமை உயரிழந்துள்ளார் என விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

ஏறாவூர் நீதிமன்ற நீதிவான் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்கு மாகாண உடல் கட்டழகு போட்டியில் காரைதீவைச் சேர்ந்த இளைஞர் தெரிவு!



கிழக்கு மாகாண ஆண்களுக்கான உடல்கட்டழகு போட்டியில் அம்பாறை மாவட்டம் சார்பாக போட்டியிட்ட காரைதீவு பிரதேச இரு வீரர்களும் பதக்கம் வென்றுள்ளனர்.

இந்த போட்டியில் ஞானேந்திரன் தமிழ்செல்வன் 90 கிலோ எடைப் பிரிவில் வெள்ளிப் பதக்கமும் மோகன் றிச்சன் 70 கிலோ எடைப் பிரிவில் வெண்கல பதக்கமும் பெற்றனர்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து சென்ற குழுவில் இவர்கள் இருவருமே தமிழ் போட்டியாளர்களாவர் என்பதுடன் இவர்கள் முதல்தடவையாக பங்கேற்றமையும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் திருகோணமலையில் கடந்த சனிக்கிழமை கிழக்குமாகாண உடல்கட்டழகு போட்டி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.


# மரண அறிவித்தல்

02 . 11 . 1968 — 08 . 03 . 2021



## ஞானசேகரம் சாமுவெல் நேசக்குமார்

Old Boy of St. John's College, Jaffna
Business Development Manager - North & East, Cargills (Ceylon) PLC

ஞானசேகரம் சாமுவெல் நேசக்குமார் அவர்கள் 08.03.2021 திங்கட்கிழமையன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் வஜிராவின் அன்புக் கணவரும் எபநேசர், ஹெப்சிபா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலம்சென்றவர்களான அல்பேட், கத்தலீன் ஞானசேகரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற உபாலி அதிகாரி, சர்தா அழகக்கோன் தம்பதிகளின் மருமகனும், றஞ்சித்குமார் (USA), ஞானகுமார் (Canada), ஜோய்ஸ் (Dubai), பேழ் (Malaysia), செல்வகுமார் (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நளினி (USA), சாந்தம் (Canada), Dr.மகேந்திரன் (Dubai), டேற்ரம் (Malaysia) காலஞ்சென்ற றுசிற்ரா, சனத், ஜயம்பதி, லலித், பிரசாத் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 10.03.2021 புதன்கிழமை காலை 9 மணி முதல் Borella ஜெயரத்ன மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலை 3 மணியளவில் இறுதி ஆராதனையின் பின்னர் Borella கனத்த, பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:-
இலங்கை +94 77 849 9212
கனடா +1 416 2698793
டுபாய் +97 150 6595193
மலேசியா +601 4334 1001
அமெரிக்கா +1 614 459 9326

தகவல்
குடும்பத்தினர்.


# ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் பெண் தொழில் முயற்சியாளர் கண்காட்சி



மட்டக்களப்பு, மார்ச் 09

சர்வதேச மகளிர் தினம் நேற்று திங்கட்கிழமை உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டதுடன், பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அந்தவகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ளூர் பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருள் கண்காட்சியும் விற்பனையும் மற்றும் சர்வதேச மகளிர் தினமும் 'நாடும் தேசமும் உலகமும் அவளே' என்னும் தொனிப் பொருளில் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் வி.தவராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ஏ.றியாஸ், கணக்காளர் எம்.சஜ்ஜாத், நிர்வாக உத்தியோகத்தர்கள் எஸ்.அப்துல் ஹமீட், சமுர்த்திதலைமையக முகாமையாளர் எம்.அஸுஸ், செயலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது சமுர்த்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொழில் முயற் சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் கைப்பணி மூலம் செய்யப்பட்ட அலங்காரப் பொருள்கள், பன் உற்பத்தி பொருள்கள், பலசரக்கு பொருள்கள், பாரம்பரிய உணவு முறைகள், உணவுப் பண்டங்கள் என்பன கண்காட்சியும் மற்றும் விற்பனையும் செய்யப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தனியான ஜனாதிபதி செயலணி மற்றும் ஆணைக்குழு பெண்களுக்காக அரச அனுமதியுடன் ஸ்தாபிக்கப்படும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் திட்டவட்டம்



பெண்களின் பிரச்சினைகளை அறிந்துக் கொண்டு அவர்களுக்கான தீர்வை வழங்கும் நோக்கத்திலான நடமாடும் சேவையை வழங்க எதிர்பார்த்துள்ளதுடன், அவர்களுக்கென்று தனியான ஜனாதிபதி செயலணி மற்றும் ஜனாதிபதி ஆணை குழுவை அரச அனுமதியுடன் ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் , எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர்தின நிகழ்வுகள் தலவத்துகொட பகுதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றிருந்தது. இதன்போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு -

பெண்களை முதல்நிலைப்படுத்தும் விசேட ஜனாதிபதி செயலணியை ஸ்தாபிப்பதே எமது நோக்கமாகும். அரச அதிகாரத்துடன் அதனை ஸ்தாபிக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை பெண்களின் அபிவிருத்தி மற்றும் நலன்புரி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பெண்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம்.

தற்போது பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றமையுடன், அவை வெறும் பதிவுகளாக மட்டுமே காணப்படுகின்றன. இந்நிலையில் இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதனால் எமது சட்டவிதிகளிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஆட்சி அதிகாரங்கள் இல்லாதவர்கள் கூட பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும். அதற்கமைய கொவிட் - 19 வைரஸ் பரவலுக்கு மத்தியில் தங்களது உரிமைகளை இழந்து பாதிக்கப்பட்டுள்ள பெண்களின் பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்காக எம்மால் உதவி ஒத்தாசைகளை வழங்க முடியும். இதன்போது பெண் சுயதொழில் முயற்சியாளர்களுக்கு போதிய வசதிகளை செய்துகொடுத்து , அவர்கள் ஊடாக எமது பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

பெண்கள் தங்களது வீடுகளில் மட்டுமன்றி வெளியிலும் பல்வேறு கொடுமைகளுக்குள்ளாகி வருகின்றார்கள். எனினும் பெண்களின் தலைமையிலான குடும்பங்களும் இருக்கின்றன. அதற்கமைய இவ்வாறு 2 லட்சம் குடும்பங்கள் காணப்படுகின்றன. அவர்களுக்கான வசதிகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைகளில் பெண்களின் உறுப்புரிமை மிகவும் குறைந்தளவிலே உள்ளது. மறைந்த முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க ஆகியோர் பெண்களாலும் ஆட்சி அதிகாரங்களை செயற்படுத்த முடியும் என்று காண்பித்துள்ளனர். அவர்களை ஆதாரமாக் கொண்டு எதிர்வரும் காலங்களில் பெண்கள் இந்தத் தலைமைப் பொறுப்புகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

பெண்களுக்கென்று வழங்கப்பட்டு வந்த சலுகைகள் தற்போது மட்டுப்படுத்தப்பட்டு வருகின்றன. இதேவேளை அவர்களது சுகாதார நலன்புரி வசதிகளை பெற்றுக் கொடுப்பதும் மிக முக்கியமானதாகும்.

இது தொடர்பில் பேசியதன் காரணமாக என்னை விமர்சித்த அனைவரும், இன்று எனது கருத்துடன் இணங்கிபோயுள்ளனர். இது தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு சில நாடுகளில் பெண்களுக்கான சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இந்த பாதுகாப்பு வசதிகள் இல்லாதமையால் பல பெண்கள் தங்களது கல்வி வாழ்க்கையையே நிறுத்தி வைத்துள்ளனர். அதனால் இது போன்ற பாதுகாப்பு அங்கிகளை பாடசாலை மட்டத்திலான பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்நிலையில் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை அறிந்து அவர்களுக்கான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக நடமாடும் சேவையை செயற்படுத்தவும் எதிர்பார்த்துள்ளோம். - என்றார்.

# இந்த அரசில் பெண்களின் உரிமை தலை துண்டிக்கப்படும் நிலையில்!

## போட்டுத் தாக்குகிறார் ருவன் விஜேவர்தன



நாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதுடன், பெண்ணின் தலையை துண்டிக்கும் அளவுக்கு அது தீவிரமடைந்துள்ளது.

இதேவேளை, பெண் பிரதி பொலிஸ்மா அதிபரின் நியமனத்தை அங்கீகரிக்க முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது. பெண்களுக்கு எதிராக இடம்பெறும் இத்தகைய செயற்பாடுகளை மாற்றி அமைக்கும் முகமாக , எமது கட்சியில் காணப்படும் முக்கிய பொறுப்புகளில் பெண்களுக்கும் இடமளிக்க வேண்டும். இதற்கு கட்சித் தலைவர் ஒத்துழைப்பு வழங்குவார் என்று எதிர்பார்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வில் கலந்துக் கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாட்டிலுள்ள அனைத்து பெண்களுக்கும் மகளிர்தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இலங்கையை பொறுத்தமட்டில் முதல் பெண் பிரதமரை உருவாக்கியமை தொடர்பில் பெருமை கொள்வதுடன், பெண் ஜனாதிபதியொருவரும் பதவிவகித்துள்ளார் என்று பெருமிதம் கொள்ள முடியும்.

இவ்வாறு ஆரம்பத்தில் பெண்களுக்கு பல முதல்நிலை பொறுப்புகளை வழங்கிய எமது நாட்டில் இன்றைய பெண்களின் நிலைமை எவ்வாறு இருக்கின்றது. உலக சனத்தொகையில் பெண்களின் எண்ணிக்கையே மிக அதிகமாக காணப்படுகின்றது.

பெண்கள் தங்களது குடும்பத்திற்கு மட்டுமன்றி நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றார்கள். பணிப் பெண்களாக வெளிநாடுகளுக்கு செல்லும் பெண்கள் , தேசிய வருமானத்துக்கு பெரும் உந்துசக்தியாக செயற்பட்டு வருகின்றார்கள்.

எனினும் கொவிட் - 19 வைரஸ் பரவலுக்கு மத்தியில் அவர்களது நிலைமை பெரும்நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளது. இதேவேளை தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு மத்தியிலே அவர்கள் மேலும் சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அதற்கமைய பெண் பிரதி பொலிஸ்மா அதிபரின் நியமனத்தை ஏற்றுக் கொள்ள முடியாத நபர்களிருக்கும் இந்த நாட்டில், தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் பெண் தலை துண்டிக்கப்பட்டு கொலைச் செய்யப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. வீட்டை விட்டு வெளியேறும் பெண்களின் கழுத்திலிருக்கும் தங்கச் சங்கிலிகளுக்குக் கூட பாதுகாப்பு இல்லை இதனை மாற்றி அமைக்க வேண்டும். இதன் ஆரம்ப கட்டமாக எமது கட்சியிலுள்ள பிரதான வெற்றிடங்களில் பெண்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இதற்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒத்துழைப்பு வழங்குவார் என்று எண்ணுகின்றேன். ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பத்திலிருந்தே பெண்களின் நலன் கருதி சிறந்த வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. அதனைப்போன்று தொடர்ந்தும் பெண்களுக்கான சேவையை பெற்றுக் கொடுக்க வேண்டும். - என்றார்.

# விபத்தில் பெண் பலி!

துடுவெல பிரதேசத்திலிருந்து மிஹிந்தல பிரதேசத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற வானொன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியதில் இடம்பெற்ற விபத்தில் இரு பிள்ளைகளின் தாயொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் உயிரிழந்த 40 வயதான மேற்படி பெண்ணின் தலைப்பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் போது மேலும் இரு ஊழியர்கள் வானில் பயணித்தனர் எனவும், அவர்களின் உடல் நிலையில் எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸாரால் முன்னெடுத்து வருகின்றனர்.

# தொழிலுக்காக குவைத் சென்ற 118 பேர் நாடு திரும்பினர்!

தொழில் நிமித்தம் குவைத்திற்கு சென்று நாடு திரும்ப முடியாமல் இருந்த 118 இலங்கையர்கள் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

குவைத்திலிருந்து விசேட விமானம் மூலம் இவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நாட்டுக்கு அழைத்துவரப்பட்டோரில் அதிகமானோர் வீட்டுப் பணிப்பெண்களாக சென்றிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டை வந்தடைந்த குறித்த அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

# சாதாரண தர பரீட்சை இறுதி நாளில் குழப்பம் விளைவித்தால் தண்டனை!

## பரீட்சைகள் ஆணையாளர் எச்சரிக்கை



கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சையின் இறுதித் தினத்தன்று குழப்பங்கள் விளைவித்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் பீ. சனத் பூஜித அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப் பரீட்சை நாளை 10 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

பரீட்சை முடிந்தவுடன் அமைதியாகக் கலைந்து செல்லும்படியும், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மத்திய நிலையங்கள் மற்றும் அதற்கு அண்மித்த பகுதிகளில் குழப்பங்களை விளைவித்தல் அல்லது பொருள்களுக்குச் சேதங்களை ஏற்படுத்தல், அடுத்த பரீட்சார்த்திகளுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தல் போன்ற அநாகரிகமான வகையில் நடந்துகொள்ளும் பரீட்சார்த்திகளுக்கு எதிராகத் தகுந்த தண்டனை வழங்கப்படும்.

1968 ஆம் இலக்க 25 ஆம் சரத்தின் பரீட்சைகள் சட்டத்தின்படி பரீட்சார்த்திகளின் பரீட்சை முடிவுகளை இரத்து செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், பரீட்சை மத்திய நிலையங்களுக்கு அண்மையில் பொலிஸ் காவல் அரண்களும் அமைக்கப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.03.2021இல் வெளியிடப்பெற்றது.